**விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம் - 2017**

---

விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் அதிகாரச்சட்டத்தின் 28(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இது தொடர்பான விபரமான அறிக்கை 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

## 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது விவசாயிகளின் பங்களிப்பு வருமானம் முறையே ரூபா 35,198,320 மற்றும் ரூபா 29,381,645 ஆக இருந்ததுடன் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் முறையே ரூபா 2,611,078,145 ரூபா 2,616,581,105 ஆக இருந்தது. விவசாயிகள் பங்களிப்புக்கு எதிராக ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரித்ததன் காரணமாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 2,450,000,000 மற்றும் ரூபா 2,520,000,000 தொகைகள் திறைசேரி மூலம் ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க திறைசேரியின் பங்களிப்பு இன்றி திட்டத்தை செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.
அவ்வாறே, மீளாய்வாண்டின் இறுதியில் திட்டத்தின் ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 63,220,697,989 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 6.1 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறே திட்டத்தின் தேறிய சொத்துக்கள் ரூபா 67,771,138,975 மறைப் பெறுமதியாக இருந்தது. அதற்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் காலக் கணிப்பு மதிப்பீடு, 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் விவசாய ஓய்வூதிய கொடுப்பனவு, மற்றும் பழைய ஓய்வூதித்திட்டத்தின் பிரகாரம் பங்களிப்பு பணத்தை அறவீடு செய்தல் என்பன பிரதானமாக தாக்கமளித்திருந்தது. அதன் பிரகாரம் இப்பாதகமான நிதி நிலைமையானது எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றமடையலாம் என்பதனாலும் இந்நிலைமையிலிருந்து விடுபடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை நிறுவனத்தினால் உறுதிப்படுத்தியிருக்கவில்லை என்பதனாலும் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலானது நிச்சயமற்ற நிலைமையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

சபையின் கீழ் காணப்படும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்திற்கான கூட்டு ஆயுள் காப்புறுதிக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 194,619,125 பெறுமதி தொடர்பாக போதியளவான தகவல்கள் கணக்கு பொறுப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 16**

நியமத்தின் 79 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான வினைத்திறன் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 2,102,060 கிரயமான மோட்டார் வாகனங்கள் முழுமையாக பெறுமாறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் அவை தொடர்ச்சியாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பீட்டுத் தவறை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 37**

(i) நியமத்தின் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்படுகின்ற பங்களிப்பாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற விவசாயிகளின் ஓய்வூதியப் பொறுப்பு ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதிக்காகவும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் அது இடம் பெற்றிருக்கவில்லை. அதற்கிணங்க ஓய்வூதியப் பொறுப்பிற்காக ஏற்பாடு செய்யும் போது அதற்காக குறிப்பிடத்தக்க அளவு தாக்கம் செலுத்தக்கூடிய வட்டி வீதம்,

ஆட்சேர்ப்பு, நீக்குதல், மரணம், ஊனமடைதல் ஆகிய அடிப்படை கூறுகளும் மற்றும் செயற்படுகின்ற பங்களிப்பாளர்களினதும் ஓய்வுபெற்ற விவசாயிகளினதும் மாற்றங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமையின் காரணமாக 2007 ஆம் ஆண்டின் போது 29,473,158,000 தொகையான நிதிஏற்பாடு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 63,220,697,989 வரை அதாவது 115 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 60 வயது பூர்த்தியடைந்த திகதியிலிருந்து ஓய்வூதியம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட திகதியிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலத்துள் 9,927 விவசாயிகள் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்திருந்ததுடன் அவர்களுக்குச் செலுத்தப்படாத நிலுவைப் பணம் ரூபா 244,034,838 கூட்டு மொத்தமாக இருந்தது. எவ்வாறாயினும் நியமத்தின் 14 ஆம் பந்தியின் பிரகாரம் அதற்காக நிதிக் கூற்றுக்களில் எதுவித ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்கீட்டுக் கொள்கைகள்

மூலதன மானிய சொத்துக்களின் வினைத்திறன் ஆயுள் காலத்துள் ஒழுங்கு முறையான அடிப்படையில் வருமானத்திற்கு செலவு வைத்தல் நிறுவனத்தின் கொள்கையாக இருந்த போதிலும் 1989 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 547,885 தொகையான மூலதன மானியம் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 3,295,285 மொத்த தொகையான செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தில் உள்ளடக்கப்பட்ட 1997 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கணக்காய்வுக் கட்டணம் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களில் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 3,257,634,369 தொகையான செலுத்த வேண்டிய ஓய்வூதிய மீதியில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக விவசாயிகளுக்குச் செலுத்த வேண்டிய ஓய்வூதியம் ரூபா 3,033,329,200 தொகை உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதியைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

கடற்றொழில் ஓய்வூதிய நலத்திட்டத்திலிருந்தும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்திலிருந்தும் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 518,000,000 மற்றும் ரூபா 295,230,441 கடன் விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்குகூற்றுக்களின் பிரகாரம் அக் கடனிற்கான வட்டியையும் உள்ளடக்கி நடைமுறைப் பொறுப்பின் கீழ் முறையே ரூபா 663,905,406 மற்றும் ரூபா 398,274,007 ஆகக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்கடனிற்காக அறவிடப்படுகின்ற வட்டி சதவீதம், மீளச் செலுத்த வேண்டிய காலம், கடன் பணத்தை உள்ளடக்கும் தவணைக் கட்டணங்களின் எண்ணிக்கை, தவணைக் கட்டணங்களின் பெறுமதி ஆகிய நிபந்தனைகளை உள்ளடக்கும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்ட அதிகாரச் சட்டம் | |
| (அ) 15(2),(3) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறிய அங்கத்தவர்களின் அங்கத்துவத்தை இரத்துச் செய்வது சம்பந்தமாக உரிய அங்கத்துவருக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக இரத்துச் செய்யப்பட்ட சான்றிதழை மீண்டும் செல்லுபடியாக்குவதற்கு ஒரு பங்களிப்பாளருக்கு உள்ள உரிமையும் மீறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது தவணைப் பணங்களைச் செலுத்தத் தவறிய 3024 அங்கத்தவர்களுக்கான தேறிய தவணைப் பணங்களாக ரூபா 18,839,792 செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) 20 ஆம் பிரிவு | ஆலோசனைக் குழு 12 அங்கத்தவர்களை உள்ளடக்கி இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 10 அங்கத்தவர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு கூட்டமேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக திட்டத்தின் நிதிவிளைவு ரூபா 42,640,061 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 74,030,438 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 31,390,377 ஆல் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது வருமானம் 13,159,670 ஆல் குறைவடைந்து செலவுகள் ரூபா 26,471,566 ஆல் அதிகரித்திருந்தும் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற மானியம் ரூபா 70,000,000 ஆல் அதிகரித்தல் இப்பற்றாக்குறை குறைவடைவதற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டின் போது மிகையாக மாறி மீண்டும் 2015 ஆம் ஆண்டிலிருந்து நிதிபற்றாக்குறையாக மாறியிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை, நடைமுறையற்ற சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை செம்மையாக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,678,119,540 தொகையான மறைப் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 74,364,024 ரூபா (159,604,332), ரூபா 20,328,449, ரூபா 54,958,066 ஆக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றல்

---

#### 4.1.1 திட்டமிடல்

---

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஆண்டின் போது 700 விவசாயிகளைச் சேர்த்துக் கொள்வதற்கும் அவர்களிடமிருந்து ரூபா 1,106,400 பங்களிப்பு பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்திறனும் மீளாய்வும்

---

நிறுவனத்தின் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 12 ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய தகைமைகளைக் கொண்டுள்ள 18 வயதிற்கு குறையாத மற்றும் 59 வயதிற்கு மேற்படாத விவசாயி ஒருவர் இத்திட்டத்தில் இணைத்து கொள்வதற்கு தகமை உள்ளவர் எனக்காட்டப்பட்டிருந்தும் 2012 ஆம் ஆண்டு இறுதியளவில் திட்டத்தில் செயற்படுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை 959,254 ஆக இருந்ததுடன் அதன் பின்னர் எந்த அங்கத்தவரும் சேர்த்துக்கொள்ளப்பட்டு அங்கத்துவத்தை மேம்மடுத்துவதற்கு போதியளவான மற்றும் முறையான நடைமுறையைப் பின்பற்றுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் போதும் இராஜினமாச் செய்தல், மரணம், பலவீனம், தவணைப் பணத்தைச் செலுத்தாமை என்பவற்றின் அடிப்படையில் திட்டத்திலிருந்து 3025 விவசாயிகள் குறைவடைந்திருந்தும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் தகவல்களை நாளது வரையாகப் போணாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்படுகினற அங்கத்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் பின்னர் அங்கத்தவர்களின் தவணைப் பணத்தை அறவிடுதல், அங்கத்துவத்தை இரத்துச் செய்தல், நலன்களை வழங்குதல், விவசாயிகளின் தனிப்பட்ட தகவல்கள் என்பன கணனி முறைமையில் முறையாக நாளதுவரையாக்காமையின் காரணமாக திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் 2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து புதிய ஓய்வூதித் திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை பழைய திட்டத்தின் பிரகாரம் பங்களிப்பு பணம் அறவிடப்பட்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் புதிய திட்டத்தின் பிரகாரம் இடம்பெற்று வருகின்றது. இந்நிலைமையின் அடிப்படையில் 2014 சனவரியிலிருந்து 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 7,664,298,940 தொகையான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 92,443,207 மாத்திரம் பங்களிப்பாக அறவிடப்பட்டிருந்தது. இத்திட்டம் எதிர்காலத்தில் நிலைத்திருந்தலை கருத்தில் கொண்டு புதிய திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு அல்லது திருத்தம் செய்து அதனை அமுல்ப்படுத்துவதற்கு 2018 மே 30 ஆந் திகதி வரை முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) ஓய்வூதியத் திட்டத்திற்காக பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் மற்றும் நலன்களைப் பெற்றுக்கொள்ளும் வயது தொடர்பாக விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தும் நடைமுறை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படாதிருந்ததன் காரணமாக 61 வயதிற்கும் 68 வயதிற்கும் இடைப்பட்ட காலத்துள் 10 விண்ணப்பதாரர்கள் பங்களிப்பு விண்ணபங்களைச் சமர்ப்பித்திருந்தார்கள் என்பது களுத்துறை மாவட்ட அலுவலகத்தின் வெளிக்களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 50 ஓய்வூதியக் கொடுப்பனவு விண்ணப்பங்களின் தெரிவுப் பரிசோதனையின் போது 08 விண்ணப்ப படிவங்களானது அவை சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து கொடுப்பனவை மேற்கொள்வதற்காக 07 மாதங்களிலிருந்து 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) திட்டத்திற்காக பங்களிப்பு வழங்கிய பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட உறுதியின் பிரகாரம் பங்களிப்பாளர்கள் 80 வயதிற்கு முன்னர் மரணமடைந்தால் அவர்களின் என்பதாவது பிறந்த நாள் எடுத்துக்கொள்ளப்படும் மாதம் வரை மனைவி ஓய்வூதியத்திற்கு உரித்துடையவர் எனக் காட்டப்பட்டிருந்தும் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 திசெம்பர் வரை மனைவி/ கணவர்களின் உரித்தினை வேண்டி எத்தனை விண்ணப்பங்கள் தலைமை அலுவலகத்திற்கு கிடைத்திருந்தன என்பது தொடர்பான எண்ணிக்கைத் தரவுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது மாவட்ட அலவலகங்களிலிருந்து ஓய்வூதியப் பிரிவிற்கு 6,680 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 4917 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் தீர்வு வழங்கப்பட்டிருந்தன. கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் 584 ஓய்வூதிய விண்ணப்பங்களுக்காக எதுவித தீர்மானமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உரிமை கோரப்படாத ஓய்வூதியங்கள் அதன் பின்னர் வரும் மாதத்தின் முதலாம் திகதி சபைக்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் முகாமைத்துவத்தால் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததன் காரணமாக செலுத்தப்படாத ரூபா 10,997,732 கூட்டு மொத்தமான ஓய்வூதியங்கள் 03 மாதத்திற்கு மேற்பட்ட காலம் விளைவற்று வெளி தபால் அலுவலகங்களில் வைத்திருக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(எ) 03 வங்கிக் கணக்குகள் தொடர்பாக 1992 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் வைப்புச்செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத ரூபா 1,179,624 பெறுமதியான 117 காசோலைகள் சம்பந்தமாக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2015 சனவரி 28 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2014 சனவரியிலிருந்து அமுல்ப்படுத்துகின்ற புதிய ஓய்வூதிய திட்டத்தின் அங்கத்தவர்களின் ஆயுள் தரவுகள் தொடர்பான மீளாய்வு நடவடிக்கைகள் மாவட்ட அலுவலகத்தால் 2015 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 25 மாவட்ட அலுவலகங்களில் 14 அலுவலகங்கள் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. கணனி முறைமையினைத் தயாரிப்பதற்கு அண்ணளவாக ரூபா 2,705,000 தொகையும் மீளாய்விற்காகப் பங்குபற்றிய விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுக்கு ஊக்குவிப்பு படிகள் மற்றும் ஏனைய செலவுகளாக ரூபா 1,726,875 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வு பூர்த்திசெய்யப்படாமை மற்றும் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் முறைமையை நாளதுவரையாக்காமையின் காரணமாக அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் விளைவற்ற செலவாக மாறியிருந்தது.

(ஆ) ஓய்வீதியத்திற்காக உரிமை கோரப்படாத சந்தர்ப்பங்களில் அவ்வாறு உரிமை கோரப்படாததற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்காது 07 மாதங்களிலிருந்து 11 மாதங்கள் வரையான தவணைக் கொடுப்பனவுகள் மாவட்ட கணக்கு அலுவலகத்திற்கு மீண்டும் மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. உரிமை கோராத ஓய்வூதிய நலன்பெறுநர்களுக்கு மூன்று தவணைகளக்கு மேற்பட்ட தவணைக் கொடுப்பனவுக்கான காசோலைகளை அனுப்ப வேண்டி ஏற்படும் போது அதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட அலுவலகம் அல்லது சபை தவறியிருந்தது.

## 4.4 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டில் மாத்தறை மாவட்டத்தில் விவசாயிகள் ஓய்வூதிய மீளாய்விற்குச் சம்பந்தப்பட்ட 22 கமநல நிலையங்கள் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 120,850 ஊக்குவிப்பு படிகள் அந்த உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படாது அங்கீகாரமின்றி மாத்தறை மாவட்ட பிரதிப் பணிப்பாளரால் மாத்தறை மாவட்ட உதவி ஆணையாளருக்கு ரூபா 15,000 தொகையும் கமநல சேவை நிலையங்களின் 22 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4000 ஆக ரூபா 88,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. மிகுதியாக இருந்த ரூபா 17,850 தொகை 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதியாகிய கணக்காய்வுத் திகதி வரை மாவட்ட அலுவலகங்களுக்கு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 17,850 தொகை 2015 திசெம்பர் 21 ஆந் திகதி விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டமைக்கு எதுவித உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்காக விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தால் தமது நோக்கெல்லைக்கு உட்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(அ) மேலே குறிப்பிட்டவாறு 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் தொடர்பான தெளிவுப்படுத்தலின் அடிப்படையில் விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தால் தங்களது நோக்கெல்லையின் பிரகாரம் அடைந்து கொள்ளக்கூடிய குறிக்கோள்களாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளாகிய வறுமையை அதன் அனைத்து வகைகளிலும் அனைத்து நபர்களாலும் முடிவுறுத்துவதற்காக விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இனங்காணப்பட்டிருந்தும் அதன் நோக்கெல்லைக்குள் கொண்டுவரப்பட்ட 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் புதிய திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனவே திட்டத்தின் திருத்தங்களின் மூலம் அடைந்து கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அமுல்படுத்துவது சம்பந்தமாக திட்டத்தின் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பாக அக்கறைகாட்டும் நபர்களாக தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு, நிதி அமைச்சு, கிராமிய பொருளாதார அமைச்சு, விவசாய அமைப்புக்கள், விவசாயிகள் ஆகிய தரப்பினர் இனங்காணக்கூடியதாக இருந்தும் புதிய விவசாயிகள் ஓய்வூதிய முறைமையினைத் தயாரிப்பதற்கு 2016 செப்தெம்பர் 13 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்காக "புதிய ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்குவதற்கு நிதி ரீதியாக நிரந்தர மற்றும் நிலைபேறான பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு" 2016 ஒக்தோபர் 26 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தில் பிரேரிக்கப்பட்டிருந்தும் 2018 யூன் மாத கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சரியான செயலாற்றலை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படை ஒன்றினை வைத்திருப்பது அத்தியாவசியமானதாகயிருந்த போதிலும் நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படை ஒன்றினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதற்காக அங்கத்தவர்களின் ஆயுள் தரவுகள் தொடர்பாக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் மீளாய்வு செய்யப்படாமை, 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வு நடவடிக்கைகள் முறைப்படியாக முகாமைத்துவம் செய்யப்படாமை, 2007 ஆம் ஆண்டின் பின்னர் செயற்படுகின்ற விவசாய பங்களிப்பாளர்கள் தொடர்பாக ஆயுள் கணிப்பு மதிப்பீடு செய்தல் எனும் விடயங்கள் காரணமாக இருந்தன என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஆயத்தம் செய்யும் போது சபையுடன் இணைந்து காணப்படுகின்ற ஏனைய நிறுவனங்களான மாவட்ட கணக்கு அலுவலகம், கமநல சேவை நிலையங்கள், கமநல சேவைத் திணைக்களம், பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய வங்கி என்பவற்றுடன் சிறந்த தொடர்புகள் இல்லாமையின் காரணமாக இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்குத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன் ஆயத்தம் செய்யும் நடவடிக்கைகள் மிகவும் தாமதமான நிலையில் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட தரவுகளுக்கும் உள்ளபடியான தரவுகளுக்குமிடையே 18 சதவீதத்திற்கும் 81 சதவீதத்திற்கும் இடைப்பட்ட முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 6.2 சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

இலங்கையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் வயதாகும் போது அல்லது பலவீனமடையும் போது அல்லது திடீர் மரணத்திற்கு உள்ளாகும் போது முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் சமூக மற்றும் பொருளாதாரச் சிக்கல்களின் போது ஏதும் நிவாரணங்களை வழங்குவதற்கு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இத்திட்டத்தில் இணைந்து கொண்டுள்ள விவசாயிகளுக்கு நிறுவனத்தால் வழங்கப்பட வேண்டிய சேவைகள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் எதிர்பார்க்கப்பட்டவாறும் நிறைவேற்றப்படாத நிலைமை காணப்படுகின்றது என்பது பின்வரும் விடயங்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

(அ) விவசாயிகள் ஓய்வூதியப் பிரிவிற்கு 29 மாவட்ட அலுவலகங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய தவணைக் கட்டண விண்ணப்பப் படிவங்களில் 2016 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 466 விண்ணப்பப் படிவங்களுக்கும் 2017 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 217 விண்ணப்பப் படிவங்களுக்கும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் (2017 ஆகஸ்ட் மற்றும் திசெம்பர்) மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய தவணைக் கட்டண கொடுப்பனவுகளைக் கணிப்பீடு செய்வதற்காக 2 ½ ஆண்டுகளுக்கும் 5 ½ ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வீச்சுடைய தாமதம் இடம்பெற்றிருந்தது.

(ஆ) 2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 13(2)(ஆ) பந்தியின் பிரகாரம் பங்களிப்பாளர்களுக்குச் செலுத்துகின்ற மாதாந்த ஓய்வூதியத்தில் ஒவ்வொரு மாதத்தின் போதும் ரூபா 50 கழிக்கப்பட்டிருந்தும் இப் பணத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் வர்த்தமானியின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | | அவதானிப்பு |
| --- | --- | --- |
| (அ) நிதிக் கட்டுப்பாடு | | உரிமை கோரப்படாத ஓய்வூதியங்களை தாமதமின்றி மீளப் பெற்றுக்கொள்ளாமை. |
| (ஆ) பங்களிப்பு பணத்தை சேகரித்தல், செலுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தல் | (i) | பங்களிப்பு தவணைப் பணக் கொடுப்பனவை செலத்தத் தவறிய அங்கத்தவர்களுக்குக் தெரியப்படுத்தி அங்கத்துவம் இரத்துச் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காமை |

(ii) கணனி முறைமையை உரிய முறைப்படி நாளது வரையாக்கி திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காமை.

(iii) தேறிய தவணைக் கட்டண கொடப்பனவு விண்ணப்பங்களைத் தயாரித்தல் கால தாமதமின்றி இடம்பெற்றிருக்காமை.